1970 ஆகஸ்ட் 29]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நல்லாற்றின் குறுக்கே கஞ்சம்பாளையத்திலும், தொட்டிப்பாளையத்திலும் குட்டைகள் கட்டும் திட்டங்கள் பரிசீலிக்கப்பட்டன. இந்த ஆற்றின் குறுக்கே அணைகள் கட்டப்படுமானால் இவ்வாற்றின் நீர்ப் பாசனத்தின் கீழ் பகுதியில் உள்ள நிலங்கள் பாதிக்கப்படும் என்பதாலும், மாவட்ட ஆட்சித்தலைவர் ஒப்புதல் தராததாலும், தலைமை பாசனப் பொறியாளர் ஒப்புக்கொள்ளாததாலும், இத்திட்டம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

வாரணசிபாளையத்தில் குட்டை அமைப்பு

* 130 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தொகுதி காளிபாளையம் கிராமம் வாரணசி பாளையத்தில் ஓர் குட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கும்? எப்போது முடிவுபெறும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) காளிபாளையம் கிராமம், வாரணசிபாளையத்தில் ரூபாய் 1.67 லட்சத்தில் குட்டை அமைக்கும் திட்டத்தின் மதிப்பீடு தலைமைப் பொறியாளரின் பரிசிலனையில் உள்ளது. பரிசீலனை முடிந்ததும் அரசின் அங்கீகாரத்துடன் வேலை ஆரம்பிக்கப்படும். வேலை ஆரம்பிக்கப்பட்டு சுமார் ஆறு மாத காலத்தில் முடிவடையும்.

Nehru's speeches.

*131 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government have authorised the local bodies to incur expenditure for the inscription of Nehru's speeches in stones; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) ஆம்.

(இ) ஜவஹர்லால் நேருவின் உரைகளிலிருந்தும், நூல்களிலிருந்தும் 12 மேற்கோள்களை மக்களின் பார்வைக்குக் காட்டி வைப்பதற்கு ஏற்றவையென அரசு தெரிந்தெடுத்து, கற்பாளங்கள், கான்கிரீட் பாளங்கள், உலோகப் பலகைகள் முதலியவற்றில் அந்த மேற்கோள்களைத் தக்கவாறு பொறித்து வைக்க, உள்ளாட்சி மன்றங்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசால் அனுப்பப்பட்ட மேற்கோள்கள் பட்டியலிலிருந்து இந்த மேற்கோள்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. தத்தம் நிதியிலிருந்து முறையே ரூ. 100, ரூ. 500-க்கு மேற்படாத செலவை மேற்கொள்ள ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள் ஆகியவற்றுக்கும், நகராட்சி மன்றங்களுக்கும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: சபாநாயகர் அவர்களே, உலக சமாதான புருஷர் நமது ஒப்பற்ற மாபெரும் தலைவர் பண்டித ஜவஹர்லால் நேருஜி அவர்கள் மனித வர்க்கத்திற்கு தந்த பொன்னான சொற்களை கிராமம் கிராமமாக கல்லிலே எழுதி பலர் காணும் இடங்களில் வைத்து, வரும் சமுதாயம் அவரைப்பற்றி நன்கு அறிந்து கொள்வதற்கு கல்லிலே அவர்களுடைய உரைகள் பொறிக்கப்பட வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: நீர் மேல் எழுத்துப்போல் இல்லாமல் கல்மேல் எழுத்தாக இளம் சமுதாயத்தினருக்கு பயன் படும் வகையில் மேற்கோள்களையும் குறிப்புகளையும் கற்பாளங்கள் மூலமாகவும் கற்பலகைகள் மூலமாகவும் ஊருக்கு ஊர் வைக்க வேண்டுமென்று ஊராட்சி ஒன்றியங்களுக்கும், நகராட்சி மன்றங் களுக்கும் அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது.

திரு. எஸ். இராமச்சந்திரன்: தலைவரவர்களே, தமிழ்த்தாயின் தவப்புதல்வன் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பொன் எழுத்துக்களையும் அதைப்போல் ஊராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும், நகராட்சிகளிலும் பிற நகரங்களிலும் கல்லிலே எழுதி வைப்பதற்கு எந்த ஊராட்சி மன்றமாவது அனுமதி கேட்டு இருக்கிறதா? அப்படிக் கேட்டால் அனுமதி தருவதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: மத்திய அரசிடமிருந்து வந்த குறிப்பின்படி ஜவஹர்லால் நேரு அவர்களின் எழுத்துக்களைப் பொறிக்க அனுமதி வழங்கி இருக்கிறோம். நம்முடைய மதிப்பிற்குரிய மறைந்த மாமேதை அறிஞர் அண்ணா அவர்களின் பொன் எழுத்துக் களைப் பொறிக்க வேண்டுமென்ற கோரிக்கை என்னிடத்தில் இல்லை என்றாலும், அதுபற்றி பரிசிலிக்க துறைக்கு தெரிவித்து இருக்கிறேன். அவர்களுடைய பரிசீலனைக்குப் பிறகு ஆலோசனை செய்து முடிவு செய்யப்படும். பல்வேறு இடங்களில் பேரறிஞர் அண்ணா அவர்கள் பொன் எழுத்துக்களை பொறிக்க ஏற்பாடு செய்யப்படும். இந்தச் சிறந்த யோசனையைத் தெரிவித்ததற்காக அங்கத்தினர் அவர்களுக்கு என் மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM: Whereas in the stone age, in those archaic days when people wanted a particular message to be transmitted to future generations they inscribed all these things on the stones in those days and whereas in these days such a thing will not serve any purpose, will the Government desist from that temptation and waste of money on inscribing these things on metallic substance?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விக்கு வாருங்கள்.

திரு. கே. விநயகம்: வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கும் பதில் சொல்லி விட்டாரே.

1970 ஆகஸ்ட் 29]

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: கடந்த 5000 ஆண்டுகளாக வரலாற்று நூல்களை எடுத்துப் பார்த்தால் கல்லிலே எவ்வளவு மிக அரிய கருத்துக்கள் கூறப்பட்டு இருக்கின்றன என்பதைப் பார்க்கிறோம். மொகஞ்சதாரோ, ஹரப்பா போன்றவற்றின் பெருமையைத் தெரிந்து கொள்வதற்கு அங்கே இருக்கும் கற்பாளங்களில் செதுக்கப்பட்டு இருப்பவைதான் மிகத் துணையாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டபடி நவீன காலத்தில் அவை ஒன்றும் பயன் அளிக்காது என்று சொல்வது பொருத்தமாகாது. கல்லில் செதுக்கப்பட்டவைகள் என்றும் நிலைத்து இருப்பவை. காண்போர் கண்களில் எல்லாம் நாள்தோறும் தென்படக் கூடியவை. அப்படிப்பட்ட கல் வெட்டுக்கள் நாட்டிற்கு மிகமிகத் தேவை.

கதர் விற்பனை

* 132 வினா—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1969–70-ம் ஆண்டில் தமிழகத்தில் அதிகமாக கதர் விற்பனை செய்த ஊராட்சி ஒன்றியம் எது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: காஞ்சீபுரம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: எவ்வளவு தொகைக்கு இந்த ஒன்றியத்தின் மூலம் கதர் விற்பனை செய்யப்பட்டது? சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கும், அதிகாரிகளுக்கும் ஊக்கத்தையும், உற்சாகத்தையும் அளிப்பதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: இந்த ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் ரூ. 2,59,674.40 மதிப்புள்ள கதர் விற்கப்பட்டுள்ளது. இது தீபாவளி காலம், காந்தியார் நூற்றுண்டுக் காலம் ஆகிய காலங்களில் எடுத்துக்கொண்ட முயற்சியின் விளைவாக விற்கப்பட்டதாகும். இதை ஊக்குவிப்பதற்காக ஒவ்வொரு வளர்ச்சி மாவட்டத்திலும் முதல் பரிசு ரூ. 500, இரண்டாவது பரிசு ரூ. 300, மூன்றுவது பரிசு ரூ. 200 ஆகிய நிலைகளிலே பாராட்டும் பொருட்டு கோப்பைகளும், கேடயங்களும் இவர்களுக்கு வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டு, அப்படி வழங்குகின்ற முயற்சி நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

கூட்டுறவுச் சங்கங்களில் ஊழல்கள்

* 133 வினா—திரு. கரு. சீமைச்சாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவுச் சங்க ஊழலைக் கண்டுபிடிக்க விசேஷ ரகசியத் துப்பறியும் பிரிவை அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(இ) ஆம் என்றுல், விபரம் என்ன?